பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 | சித்திரை 15 புதன்கிழமை | 28.04.2021 | கதிர் 42

## மே தினப் பேரணியை ஒன்லைனில் நடத்த ஜே.வி.பி. தீர்மானம்

இலங்கையில் தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக மே தினப் பேரணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜே.வி.பி. தனது மே தின நிகழ்வுகளை ஒன்லைனில் நடத்த முடிவு செய்துள்ளது.

☞2

# கொரோனாத் தொற்று மீண்டும் உச்சமடைய கோட்டா அரசின் அசமந்தப்போக்கே காரணம்

### ஜே.வி.பியின் எம்.பி. விஜித ஹேரத் பகிரங்கக் குற்றச்சாட்டு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று விவகாரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு சரியானகவனம்செலுத்தத்தவறியமைால் மீண்டும் தொற்று அதிகரித்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைகளை அரசு குறைத்திருந்தது எனவும், இதன் விளைவாக அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியைக் காட்டியிருந்தது எனவும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

☞2

# இலங்கையில் பரவுவது பிரிட்டனின் வைரஸே!



### பரிசோதனையில் உறுதிப்படுத்தல்; பாதிப்பு உச்சம் எனவும் எச்சரிக்கை

**இலங்கையில் தற்போது பரவி வரும் புதிய கொரோனா வைரஸ் இந்தியாவில் பரவல் அடைந்துவரும் வைரஸ் இல்லை எனவும், அது பிரிட்டனில் பரவி வரும் B.1.1.7 என்ற வைரஸ் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

☞2

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமையால் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நடவடிக்கை

### பக்தர்கள் உள்ளிட்ட பலர் தனிமைப்படுத்தல்

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது பக்தர்கள் நடந்துகொண்டமையால் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் கலந்துகொண்ட மக்கள் எனப் பலர் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஆலயங்களின் திருவிழாக்கள் இடம்பெற்று வரும் நிலையில் அங்கும் பெரும்பாலானவர்கள் உரிய முறையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை எனக் கூறப்படுகின்றது. அதனால் கொரோனாத் தொற்று அதிகளவில் மக்கள் மத்தியில்

☞2

## சீனப் பாதுகாப்பு அமைச்சர் கோட்டாவுடன் நேரில் பேச்சு



இலங்கை வந்துள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் இன்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என ஜனாதிபதி ஊடகப்

☞2

## துணைவேந்தருக்கு இருதய சத்திரசிகிச்சை



யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி ஸ்ரீ சற்குணராஜாவுக்கு யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று வெற்றிகரமாக இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அந்த சிகிச்சை குறித்து வைத்திய வட்டாரங்கள் முழுத்

☞2

# நாட்டின் பல பகுதிகள் எந்த நேரமும் முடங்கும்

### மக்கள் அத்தியாவசியப் பொருள்களைச் சேமித்து வைப்பது அவசியம் என்கிறார் இராணுவத் தளபதி



எதிர்வரும் நாள்களில் நாட்டில் அதிக கொரோனா வைரஸ் தொற்று பதிவாகும் பிரதேசங்கள் எந்த நேரத்திலும் தனிமைப்படுத்தப்படலாம். எனவே, மக்கள் பல நாள்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைச் சேமித்து வைப்பது அவசியம்.

☞2

## கொரோனா அச்சம் காரணமாக 240 கிலோ கஞ்சா தீயிட்டு எரிப்பு

**(ந.லோகதயாளன்)**



இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்டதாகக் கருதப்படும் 240 கிலோ கிராம் கஞ்சா கொரோனா அச்சம் காரணமாகத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

மாதகல் கடற்கரையோரத்தில் மறைத்து வைத்திருந்த 240 கிலோ கஞ்சாவை இன்று

☞2

## ரிஷாத்தின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் இன்று பெரும் போராட்டம்

**(வவுனியா நிருபர்)**



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுதடுப்புக்காவலில்வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் எம்.பியை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வவுனியாவில் இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம்

☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார நடைமுறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடுருவும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், யாழ். மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் சுகாதார நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப் படாமை கவலையளிக்கிறது என யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

வழிபாட்டு இடங்களில் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்ட நிலையில் யாழ். மாவட்டத்தில் வழிபாட்டு இடங்களில் இந்த நடைமுறையைப் பொது மக்கள் அனுசரித்துச் செல்லவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும், வழிபாட்டு இடங்களில் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் கூறினார்.

## கொரோனா அச்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை கடற்படையினர் கைப்பற்றினர். இவ்வாறு கைப்பற்றிய கஞ்சாவைப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

எனினும், தற்போது இந்தியாவில் வேகமாகப் பரவி வரும் கொரோனாவால் குறித்த கஞ்சாவைக் கையாள்வதில் உள்ள சுகாதார நெருக்கடி காரணமாக அவை தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

## இலங்கையில் பரவுவது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, பொரலஸ்கமுவ மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார். கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன் காரணமாக இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது எனவும், அதனால் பாதிப்பு அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டின் பல பகுதிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் மக்களைப் பீதியடையச் செய்யவோ அல்லது நிலைமையை மறைக்கவோ தேவையில்லை. ஆனால், எந்தவொரு சூழ்நிலையையும் எதிர் கொள்ளத் தயாராக இருப்பது முக்கியம்.

நாட்டில் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே பிரதேசங்களை முடக்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சிகிச்சையளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய தேவைப்பட்டால் மருத்துவமனைகளுக்குக் குறைந்த பட்சம் 10 ஆயிரம் படுக்கைகளை வழங்கவும், நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கொரோனா சிகிச்சை மையங்களை அதிகரிக்கவும் இராணுவம் தயாராக இருக்கின்றது.

அத்தோடு நாட்டில் தேவைக்குப் போதுமான ஒட்சிசன் இருப்பதாக சுகாதாரப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. பொய்யான தகவல்கள் குறித்து மக்கள் குழப்பம் அடையாது உத்தியோகபூர்வ நிறுவனங்கள் வெளியிடும் தகவல்களுக்கு மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

எத்தனை சவால்கள் வந்தாலும், எத்தனை அலைகள் வந்தாலும் ஒரே தேசமாக அதனை எதிர்கொண்டு வெற்றி அடைவோம் - என்றார்.

## கொரோனாத் தொற்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமீபத்திய பி.சி.ஆர். பரிசோதனை மூலம், கிராமப்புறங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையிலான நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், கொரோனா வைரஸ் தொடர்பான இறப்புகளும் அதிகரித்து வருவதால் ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டன என அரசு கூறியதாலேயே பொதுமக்களும் கொரோனா குறித்த அச்சத்தைத் தணித்து, நிதானமாகப் பயணிக்கத் தொடங்கினர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரிஷாத்தின் விடுதலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

ரிஷாத் பதியுதீனின் கைதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அவரை உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் எனவும் அரசை வலியுறுத்துவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சிறுபான்மையினச் சமூகங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவே தாம் வீதியில் இறங்கி நிற்கின்றோம் எனவும், இதன்படி ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யாவிட்டால் நாடு பூராகவும் போராட்டத்தை நடத்துவோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தப் போராட்டத்தில் வவுனியா நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான கே.இராசலிங்கம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களான ஏ. ஆர். எம். லரிப், அப்துல் பாரி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மே தினப் பேரணியை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஒன்லைன் மூலம் மே தினப் பேரணி இடம்பெறும் எனக் கூறினார்.

உழைக்கும் சமூகத்துக்காகவும், அடக்குமுறையை மேற்கொள்ளும் தலைவர்களிடமிருந்து தங்கள் உரிமைகளை கோருவதற்காகவும் மே தினம் நினைவு கூரப்படுகின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சீனப் பாதுகாப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு தெரிவித்துள்ளது.

சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப் பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கும் தனக்கும் இடையிலான இரு தரப்பு கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது எனச் சீனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இந்த விஜயத்தின் மூலம் பலமடைந்திருக்கின்றது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றிரவு இலங்கை வந்தார்.

இன்று முற்பகல் ஜனாதிபதியைச் சந்தித்த அவர், இன்று மாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளார்.

## துணைவேந்தருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்தி தெரிவித்தன.

யாழ் போதனா ஆஸ்பத்திரி இருதய சிகிச்சை மருத்துவ நிபுணர்களுடன் கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட வைத்திய நிபுணரும் இணைந்து இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது இருதயத்தில் மூன்று இடங்களில் இரத்தக் குழாய்களில் அடைப்பு நீக்கி சுருளிகள் (Stents) இந்த சிகிச்சையின் போது பொருத்தப்பட்டன எனத் தெரியவந்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - 076 443 8622

## மத்தேகொட தொழிற்சாலையொன்றின் ஐந்து ஊழியர்களுக்குக் கொரோனாத் தொற்று

மத்தேகொடயிலுள்ள ஆல்பா தொழிற்சாலையின் ஐந்து ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த அனைவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுடன் நேரடி தொடர்பைப் பேணிய 10 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய ஏனையவர்கள் தொடர்பில் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஆல்பா தொழிற்சாலையில் சுமார் 300 பேர் பணியாற்றுகின்றனர். அவர்கள் அனைவரும், வைரஸ் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணி இருந்தார்களா என்பது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேவை
கைதடியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு 077 272 9651

மஞ்சள் கன்று விற்பனைக்கு
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

கடை வாடகைக்கு தேவை
யாழ்ப்பாணம் K.K.S.வீதியில் யாழ். இந்து கல்லூரி தொடக்கம் மருதனார் மடம் வரையான எல்லைக்குள் கடை ஒன்று வாடகைக்கு உடன் தேவை.
தொடர்புகளுக்கு - 0774135036




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கனடாவில் தமிழர் சாதனை

இலங்கை, நேரடி பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்ட பின்னர் மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த சிங்கள, பௌத்த பேரினவாதப் போக்குடைய அரசுகளால் இந்த நாட்டின் தனித்துவமிக்க தேசிய இனத்தவர்களான தமிழர்கள் தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கப்பட்டே வருகின்றனர். பேரினவாத அரசுகளின் செயல் போக்காக வெடித்த அரச பயங்கரவாத இனவெறிக்கு ஈடு கொடுக்க முடியாத தமிழர்கள் தத்தமது தாயக பிரதேசங்களில் இருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி பூமிப் பந்து எங்ஙனும் தூக்கி வீசப்பட்டார்கள்.

அப்படித் தாம் சிதறுண்டு வீழ்ந்த இடங்களில் எல்லாம் – அரசியல், வாழ்வியல் தஞ்சம் புகுந்த நாடுகள் எங்கும் – தமிழர்கள் தம்மைத் தாமே மீளவும் ஒரு சமூகக் கட்டமைப்பாக நிலைநிறுத்திக் கொள்ள முயன்றனர். அதில் வெற்றியும் கண்டனர்.

அத்தகைய ஒரு தனித்துவ சமூகக் கட்டமைப்பாக அவர்கள் காலூன்றிய தேசங்களில் ஒன்று கனடா. அந்த நாட்டின் வாழ்வியலில் பிரிக்க முடியாத ஒரு சமூகமாக அவர்கள் ஒன்றித்துப் போன அதேநேரம், ஈழத் தமிழர்கள் என்ற தனித்துவ சமூக வடிவத்தையும் அவர்கள் துறக்காமல் தொடர்ந்து பேணி வருகின்றனர்.

கனடாவில் அந்த நாட்டு மக்களுடன் ஒன்றித்துப் போன நம் உறவுகள், அதேவேளை ஈழத் தமிழர்களின் பிறப்புரிமைத் தனித்துவத்தைப் பேணும் பண்பாட்டுக் கோலங்களையும் தவறாது கைக்கொண்டு பேணுவதிலும் அதிகம் முனைப்பாகவும் ஈடுபாட்டுடனும் இருக்கின்றார்கள்.

தமிழர் தம் வாழ்வியல் சிறப்புகளைப் பிரதிபலிக்கும் பண்டிகைகளும், கொண்டாட்டங்களும், வழக்காறு நிகழ்வுகளும், சம்பிரதாயபூர்வ அனுஷ்டிப்புகளும் நமது இலங்கையில் நடக்கின்றனவோ இல்லையோ, தமிழர்கள் புகலிடம் புகுந்த கனடா நாட்டில் வெகு சிறப்பாக நடக்கின்றன.

புலம்பெயர் தேசமான கனடாவில் தமிழர் தம் சிறப்பை நிலைநிறுத்தும் ஒரு பாரிய முயற்சியாக ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் முதலாவது தமிழ் இருக்கையை நிறுவுவது தொடர்பான இமாலயத் திட்டம் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் அந்தப் பல்கலைக்கழகத்தோடு கனேடியத் தமிழர் பேரவையும், தமிழ் இருக்கை அமைப்பும் 2018 மே இல் ஒப்பந்தம் செய்தபோது அதற்கான குறிக்கோளாக முப்பது லட்சம் கனேடிய டொலர் (சுமார் 47 கோடி ரூபாவுக்கு அதிகம்) இலக்கை எட்டுவது என்பது இயலாத காரியமாகவே – மலைப்பை ஏற்படுத்தும் விடயமாகவே – இருந்தது.

கொவிட் – 19 என்ற உலகளாவிய பெருந்தொற்றால் எல்லாச் சமூகங்களும் துவண்டு, நலிந்து, சுருங்கிக் கிடக்கையில், இந்த நலிவுக்கு மத்தியிலும் இவ்விடயத்தில் சாதித்துக் காட்டியிருக்கின்றது ஈழத் தமிழர்களின் புலம்பெயர் சமூகம் என்பது நம் அனைவரையும் பூரிக்கச் செய்யும் பெறுபேறாகும்.

கொடையாளர்கள், சமூக அமைப்புக்கள், நமது ஊர்ச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், கலைஞர்கள், சமூக ஊடகங்கள் என்று புலம்பெயர் தேசங்களில் உள்ள நமது பல திறத்தாரும் ஒன்றிணைந்து மேற்கொண்ட அளப்பரிய பணியால் இந்த அருங்குறிக்கோள் தந்தை செல்வாவின் 44 ஆவது வருட நினைவு நாளில் எட்டப்பட்டிருக்கின்றது.

இந்த நிதிக்கு தமிழக மாநில அரசு ஒரு லட்சத்து 73 ஆயிரம் கனேடிய டொலர்களும், அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் எஸ்.ஜே.வி. மற்றும் ஈ.ஜே.செல்வநாயகம் நிதியம் இரண்டரை லட்சம் கனேடிய டொலர்களும், பெயர் குறிப்பிட விரும்பாத ஓர் அன்பர் ஐந்து லட்சம் கனேடிய டொலர்களும், ஸ்டாலின் தலைமையிலான தி.மு.கழகம் 1G ஆயிரம் கனேடிய டொலர்களும் அளித்தமை முக்கிய அம்சமாகும்.

இந்த முயற்சி மூலம் உலகின் மிகச் சிறந்த பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ் மொழி, அதன் இலக்கியங்கள், சரித்திரம் ஆகியவை குறித்து சுயாதீனமான – சுதந்திரமான – பக்கச்சார்பற்ற – நடுநிலையான – நிபுணத்துவக் கல்வி ஆய்வுக்கு வழி சமைக்கப்பட்டிருக்கின்றது.

பூமிப் பந்தில் தமிழ் மொழியின் தனித்துவச் சிறப்பை ஆதாரங்களுடன் நிலைநிறுத்தும் நிபுணத்துவ முயற்சியில் இது ஒரு மைல் கல். குறிப்பிடத்தக்க ஒரு பாய்ச்சல்.

அதுவும் தமிழரின் பாரம்பரிய தாயகத்தில் தமிழர் தம் சிறப்பும், பெருமையும், தனித்துவமும் பேரினவாத வெறி கொண்ட ஆட்சியாளர்களினால் திட்டமிட்டுச் சிதைத்து அழிக்கப்படும் ஒரு பேரவல நிலையில் இத்தகைய அறிவுசார் முயற்சி முக்கிய திருப்பு முனையாகும். அத்தகைய அடக்குமுறை அழிவு முயற்சிகளுக்கு தந்திரோபாயத்துடனும் மதிநுட்பத்துடனும் முகம் கொடுக்கும் ஒரு சிறந்த உத்தியும் கூட இது.

புலம்பெயர் சமூகம் ஒன்று கனடா போன்ற மேற்குலக மண்ணில் நிலைநாட்டியிருக்கும் அருஞ்சாதனையாகக் கொள்ளத்தக்கது இந்தப் பெருமுயற்சி.

இதில் ஈடுபட்டு வெற்றியையீட்டியிருக்கும் கனடா சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் ஈழத் தமிழினம் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றது.

## வவுனியா சுற்றுலாமைய குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்யுமாறு ஆளுநர் சாள்ஸ் பணிப்பு!



வவுனியா சுற்றுலாமைய விவகாரத்தில் குத்தகைதாரருடனான ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறுவடமாகாண ஆளுநர்பணித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்டசெயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது, இதன் போதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

வவுனியாவில் நீர்ப்பாசனத்திணைக் களத்தின் அனுமதியுடன் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர சபையால் பொழுதுபோக்கு மையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறுஅமைக்கப்பட்டபொழுதுபோக்கு மையம் நபர் ஒருவருக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த குத்தகைதாரர் நகர சபையின் அனுமதி இல்லாமல் புதிதாகக் கட்டடங்களை அமைத்து நிபந்தனைகளை மீறியிருந்தார் எனவும் நகரசபையால் குற்றம் சாட்டப்பட்டதுடன், அந்த கட்டடங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் குத்தகைதாரர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தமையால் அதனை உடைப்பதற்குநீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவு ஒன்றை வழங்கியிருந்ததுடன், வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன.

இந்நிலையில் நேற்று செவ்வாய் இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இந்த வியடம் தொடர்பாகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர் –

கட்டடத்தை அகற்றுவதற்கு எதிராகவே வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

அந்தவிடயம் நீதிமன்றில் இடம்பெற்று வருவதால் அதில் தலையீடு செய்யாமல், ஒப்பந்ததாரருடான குத்தகைஒப்பந்தம் மீறப்பட்டிருக்கின்றமையை முன்னிறுத்தி அதனை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு நகரசபைக்குத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக சட்டத்தரணிகளின் கருத்துக்களை பெற்று ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது

## கொரோனா பரவலின் வேகம் இலங்கையில் அதிகரித்துள்ளது



நாட்டில் இம்முறை கொரோனா பரவலின் வேகம் அதிகரித்துள்ளது என தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

தற்போது அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களில் அதிகமானோர், நாம் ஏற்கனவே அடையாளம் கண்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திய நபர்களுடன் முதலாவது தொடர்புகளைப் பேணியவர்கள் என அந்தப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதனை ஒரு சாதாரணமாக விடயமாகக் கருத முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் முதலாவது கொரோனா தொற்று அலையின் போது அதற்கு முகங்கொடுக்கும் வகையில் வைத்தியசாலைகளைத் தயார்படுத்தினோம் அதேபோல் தேவையான அளவிற்கு தற்போதும் அவற்றை ஒழுங்குபடுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது தம்மிடம் போதியளவு வசதிகள் உள்ளனஎனவும்அவர்மேலும்கூறியுள்ளார்.

## தனிமைப்படுத்தல் பகுதிகளில் வசிக்கும் பொலிஸாரை அங்கிருந்து வெளியேற வேண்டாம் என்று உத்தரவு

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களை அங்கிருந்து வெளியேற வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண இன்று (புதன் கிழமை) இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அந்தந்த பகுதிகளில் தனிமைப்படுத்தும் நிலை நீங்கும் வரை பொலிஸ் உத்தியோகத்தர்களை வீட்டிலேயே இருக்குமாறு அவர் கூறியுள்ளார்.

அவர்கள் வேலைக்கு செல்லவில்லை என்பதற்கான அறிக்கையை சமர்ப்பிக்கத் தேவையில்லைஎன்றும்அவர்கூறியுள்ளார்.

இதேநேரம், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு யாரும் நுழையவோ வெளியேறவோ முடியாது என்றும் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்கள் மட்டுமே தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக்குள் நுழைந்து வெளியேற முடியும் என்று அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

யாராவது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியை விட்டு வெளியேறினால், ஒரு வெளிநாட்டவர் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக்குள் நுழைந்தால் அது தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறும் செயலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சட்டங்களை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அஜித் றோஹண எச்சரித்துள்ளார். இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்த வாரம் விரைவாக அதிகரித்துள்ளமையால் இலங்கையில் பல பகுதிகள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்ட புதிய வகையே இலங்கையில் பரவுகின்றது

இலங்கையில் பரவும் கொரோனா வைரஸின் பிறழ்வு பிரித்தானியாவில் பரவிய புதிய வகை கொரோனா வைரஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்று (புதன்கிழமை) இடம் பெற்றஊடகவியலாளர்சந்திப்பில்உரையாற்றிய ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை பணிப்பாளர் வைத்தியர் சந்திமா ஜீவந்தரா இந்தத் தகவலை வெளியிட்டார்.

கொழும்பு, பொரலஸ்கமுவ மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் காரணமாக இலங்கையில் தற்போது வேகமாகக் கொரோனா வைரஸ் பரவி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



கொரோனா சிகிச்சைக்கு அதிக கட்டணம்

# தனியார் மருத்துவமனைகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கனிமொழி எம்.பி. கோரிக்கை

தமிழகத்தில் கொரோனாப் பரவல் வெகுவாக அதிகரித்து வருகிறது. இதனால், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது.

இதற்கிடையில், தமிழகத்தில் உள்ள பல தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணம் உள்ளன.

இது குறித்து டுவிட்டரில் பதிவிட்ட தி.மு.க. மகளிரணிச் செயலாளரும், எம்.பியுமான கனிமொழி, ‘கொரோனா சிகிச்சைக்கு அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவமனைகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!’ என்று தெரிவித்துள்ளார்.



‘அரசு நிர்ணயித்த கொரோனா சிகிச்சைக் கட்டணத்தை விட அதிகமாக சில தனியார் மருத்துவமனைகள் வசூலித்து வருவதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கட்டணத்தை நிர்ணயித்த அரசு, அதனை முறையாகச் செயல்படுத்தவும் வேண்டும்.

அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவமனைகள் மீது தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களைக் காக்க வேண்டும்’ என அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

# வெற்றிக் கொண்டாட்டங்களுக்கு தேர்தல் ஆணையம் தடை!

தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்கு வங்காளம், அசாம் உட்பட ஐந்து மாநிலங்களிலும் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில்பதிவானவாக்குகள்மே2ஆம்திகதிஎண்ணப்படவுள்ளன. அன்றைய தினம், ஐந்து மாநிலங்களிலும் தேர்தல் வெற்றியைக் கொண்டாடுவதற்கு தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது. தடை உத்தரவை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாவின் இரண்டாவது அலை பரவுவதற்குத் தேர்தல் ஆணையமே காரணம் என்று சென்னை உயர்நீதி மன்றம் நேரடியாக குற்றஞ்சாட்டி, கடுமையாக விமர்சித்திருந்த நிலை யில், தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்களுக்குத் தடை விதித்து தேர்தல் ஆணையம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# அசாம் மாநிலத்தில் நிலநடுக்கம் 6.4 ரிச்டர் அளவில் பதிவானது

அசாம் மாநிலத்தில் க்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இன்று காலை 7.50 அளவில் நிகழ்ந்துள்ள இந்த நில நடுக்கம் ரிச்டர் அளவில் 6.4 ஆக பதிவானது. அசாம் மாநிலத்தின் சோனித்பூர் மாவட்டத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கமானது மேற்கு வங்க மாநிலத்திலும் உணரப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டதை உணர முடிந்ததாகவும் இது பற்றிய தகவல்களை திரட்டி வருவதாகவும் அசாம் மாநில உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இரு நாள்களில் தொற்று பரவும் வேகம் குறைந்துள்ளது

## இராதாகிருஷ்ணன் தகவல்



கடந்த இரண்டு நாள்களாக தமிழகத்தில் கொரோனாப் பாதிப்பின் வேகம் சற்றுக் குறைந்துள்ளது என தமிழக சுகாதாரத் துறை செயலாளர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கொரோனாப் பரவல், தடுப்பு நிலைமைகள் பற்றி விளக்கமளிக்கும் முகமாக தமிழக சுகாதாரத்துறை செயலாளர் இராதாகிருஷ்ணன் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர், தமிழகத்தில் கொரோனாப் பரவலின் வேகம் சற்றுக் குறைந்திருக்கிறது. அடுத்த சில நாள்களுக்கு மக்கள் தேவையின்றி வெளியே வரக் கூடாது. பொது நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் கலந்து கொள்வதைக் குறைத்துக் கொள்வது மேலும் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த உதவும். முகக்கவசம் அணியாமல் பொதுமக்கள் யாரும் வெளியே வர வேண்டாம். தேவையின்றி, பொதுமக்கள் வெளியே வருவதைத் தவிர்த்துவிட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நோய் அறிகுறிகள் காணப்பட்டால், அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள முன் கள பரிசோதனை மையங்களில் பரிசோதித்துக் கொண்டு, அவர்கள் தரும் ஆலோசனைப்படி வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டு சிகிச்சை பெறுவதா அல்லது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதா என்பதை நடைமுறைப்படுத்த வேண்டும். இலேசான அறிகுறி தென்படும்போதே எச்சரிக்கையாக செயற்படுவது ஆபத்தைக் குறைக்கும் என்றும் அவர் ஆலோசனை வழங்கினார்.

# நம்பிக்கையுடன் போராடுவோம்!

## கமல்ஹாசன் அறிக்கை

‘நம் வசந்த காலங்கள் நிச்சயம் திரும்ப வரும்; நம்பிக்கையுடன் போராடுவோம்’ என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகள், சுய பாதுகாப்புத் தொடர்பாகஅவர்அறிக்கையொன்றைவெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘கொரோனா பெருந்தொற்றுப் பரவலின் இரண்டாவது அலை தீவிரமடைந்து வருகிறது. இந்தத் தீநுண்மத்தால் கடந்த ஆண்டிலிருந்தே நமது வாழ்வு எதிர்பாராத வகையில் மாறிப் போய்விட்டது. நோய்க் கிருமியிடம் இருந்து தப்பித்து வாழ்வதற்கான வழிமுறைகளை நாம் கடைப்பிடித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

எந்தத் தயக்கமும் அச்சமும் காட்டாமல் தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள். சுற்றத்தாரை தடுப்பூசி போட்டுக் கொள்ள வலியுறுத்துங்கள். நான் இரண்டு தவணைகளை முடித்துவிட்டேன். எனக்கு அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

பொதுவெளி நடமாட்டத்தை முடிந்தளவில் குறைத்துக் கொள்ளுங்கள்.

அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியே சென்று வரும் பொறுப்பை வீட்டில் இருக்கும் இளைஞர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தவிர்க்க முடியாமல், வெளியில் செல்ல நேர்ந்தால் தரமான முகக்கவசம் தவறாது அணிய வேண்டும். தனிமனித இடைவெளியைக் கடைப்பிடிப்பது, முடிந்தவரை கூட்ட நெரிசல் அதிகம் இருக்கும் இடங்களுக்குச் செல்லாமல் இருப்பது ஆகியவற்றை நிச்சயம் பின்பற்ற வேண்டும்.

எப்போது வெளியே சென்று வந்தாலும் உடனடியாகக் குளித்து ஆடைகளை மாற்றிக்கொள்வது அவசியம்.

கைகளைச் சோப்பினால் அல்லது சனிடைசரால் அடிக்கடி சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

அடிக்கடி நமது பாரம்பரிய முறைப்படி நீராவி பிடிப்பது, மூச்சுப் பயிற்சி, உடற்பயிற்சி, யோகா ஆகியவற்றை மேற்கொள்வது அவசியம்.

ஆரோக்கியமான உணவுப் பழக்கத்திற்கு மாறிக்கொள்வதுடன், மரபுசார் மருத்துவர்கள் பரிந்துரைப்பது போல அன்றாடம் ஒரு ரசம் வைத்துச் சாப்பிடுவதும் நல்லது.

இரண்டாவது அலை குழந்தைகளையும் அதிக அளவில் பாதிக்கிறது. வீட்டில் குழந்தைகள், முதியோர் இருந்தால், அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

உறுதி செய்யப்பட்ட அதிகாரபூர்வமான செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளுங்கள். வதந்திகளை நம்பாதீர், பரப்பாதீர்.

மனநிலையை ஆரோக்கியமாக நேர் சிந்தனையோடு வைத்துக்கொள்வது மிகவும் அவசியம். அதற்கு நல்ல புத்தகங்களை வாசிப்பது, இசை கேட்பது, நண்பர்களோடு தொலைபேசியில் அல்லது இணையத்தில் உரையாடுவது போன்றவை உதவக்கூடும்.

உங்களையே நம்பி இருக்கும் பணியாளர்கள், சிறு வணிகர்கள், சிறுசிறு சேவைகளை நல்குபவர்களைக் கைவிடாதீர்கள். உலகமே ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருக்க வேண்டிய தருணம் இது. முடிந்த மட்டும் பிறருக்கு உதவுங்கள்.

கொரோனாத் தொற்று பெருநகர்ப்புறங்களில் அதிகமாக இருப்பதற்கு மிக முக்கியமான காரணம் மக்கள் தொகைப் பெருக்கமும், நெருக்கடியும்தான். சமவாய்ப்புள்ள நகரங்கள், தற்சார்பு கிராமங்கள்தான் உலகமே செல்ல வேண்டிய திசை. உங்கள் தொழிலை, சேவையை, வேலைகளை உங்கள் சொந்த ஊரில் இருந்தே செய்ய முடியும் என்றால் அதற்கான முயற்சிகளை இன்றே மேற்கொள்ளுங்கள்.

அரசுகளால் ஓர் எல்லைக்கு மேல் நம்மைக் காக்க முடியாது என்பதே இன்றைய புள்ளிவிவரங்கள் காட்டும் நிதர்சனம். மருத்துவக் கட்டமைப்புக்கு மேலும் மேலும் சுமையைக் கூட்டக் கூடாது. உங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பை உங்களிடமே வைத்துக்கொள்ளுங்கள்.

இறுதியாக மக்கள் நீதி மய்யம் உறுப்பினர்களுக்கு, ‘உத்தரவு கேட்டு உதவிக்குப் போவதில்லை; உதிரத்தில் உண்டே உதவும் குணம்’ என்று உங்களைப் பற்றி நான் பெருமையாகக் குறிப்பிடுவதுண்டு. ஊரே முடங்கிக் கிடந்த போது ‘நாமே தீர்வு’ என முதன்முதலில் களத்தில் இறங்கியவர்கள் நாம். நமது நற்பணிகளைத் தொய்வில்லாமல் தொடர்வோம்.

அருகிலிருக்கும் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட மருத்துவக் கட்டமைப்புகளுக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறதென்பதை விசாரித்து உடனுக்குடன் உதவுங்கள். கொரோனா பெருந்தொற்றுக் குறித்தும், தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்தும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள். நோய்த் தொற்றிலிருந்து மக்களைக் காக்க யார் என்ன முயற்சி செய்தாலும் எந்தத் தயக்கமும் இன்றி அவர்களோடு கரம் கோர்த்துப் பணியாற்றுங்கள்.

பூமியின் ஒவ்வொரு மானுடரும் ஒருங்கிணைந்து ஒத்திசைந்து ஒரே நோக்கத்துடன் தன்னலமின்றிச் செயல்பட்டால்தான் இந்தத் தீநுண்மத்தை வீழ்த்த முடியும். மானுடம் அதை நிச்சயம் செய்யும். நம் வசந்த காலங்கள் நிச்சயம் திரும்ப வரும். நம்பிக்கையுடன் போராடுவோம். நாளை நமதே!’ என்று கமல்ஹாசன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பு போராட்டத்தில் இந்தியாவுக்கு உதவி

# உலகநாடுகள் பலவும் கரங்கொடுப்பு!

கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் உலக நாடுகள் பலவும் இந்தியாவுக்கு உதவிக்கரம் நீட்டத் தொடங்கியுள்ளன.

கொரோனாவின் இரண்டாவது அலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியா போராடிக்கொண்டிருக்கிறது. கடந்த 22 ஆம் திகதி தொடங்கி தினமும் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தொற்று பாதிப்புக்கு ஆளாகி வருகிறார்கள். இரண்டாயிரத்துக்கும்அதிகமானோர்உயிரிழக்கிறார்கள்.

இந்த நிலையில் கொரோனாவுக்கு எதிரான இந்தியாவின் போரில் உலக நாடுகள் பலவும் உதவிக்கரம் நீட்டத்தொடங்கி இருப்பது சற்றே ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது. அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து, சிங்கப்பூர், இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளும் உலக சுகாதாரநிறுவனம், ஐரோப்பியயூனியன்போன்றவையும் அவசர மருத்துவ உதவியை இந்தியாவுக்கு அளிப்பதாக அறிவித்துள்ளன. இந்த நிலையில் இந்தியாவுக்கு ஒக்சிஜன் உற்பத்தி சாதனங்கள், திரவ ஒக்சிஜன் கண்டெய்னர்கள், வென்டிலேட்டர்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை வான் வழியாகவும், கடல் மார்க்கமாகவும் அனுப்பி வைக்க பிரான்ஸ் முன்வந்துள்ளது.

இதுகுறித்து பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறுகையில், இந்தியாவுக்கான மருத்துவ விநியோகத்தில் 8 ஒக்சிஜன் உற்பத்தி இயந்திரங்களும் அடங்கும். இவை ஒவ்வொன்றினாலும் 250 படுக்கைகள்கொண்டமருத்துவமனைகளுக்கு10ஆண்டுகளுக்கு இடைவிடாத ஒக்சிஜன் விநியோகத்தைச் செய்ய முடியும் என தெரிவித்துள்ளது. தினமும் பத்தாயிரம் நோயாளிகளுக்கு ஒக்சிஜன் விநியோகிக்க ஏற்ற வகையில் ஐந்து ஒக்சிஜன் கன்டெய்னர்கள், 28 வென்டிலேட்டர்கள், 200 மின்சார சிரிஞ்ச் பம்புகளையும் பிரான்ஸ் அனுப்பி வைப்பதாக தெரிவித்துள்ளது.

கொரோனாவுக்கு எதிரான போரில் இந்தியாவுக்குத் தேவைப்படும் வளங்களைத் திரட்டுவதற்கும், உதவுவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும் அமெரிக்காவின் 40 முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் ஒன்றிணைந்துள்ளனர்.

அமெரிக்க இந்திய வர்த்தக கவுன்ஸில் மற்றும் அமெரிக்க இந்திய மூலோபாய மற்றும் கூட்டு மன்றம், வர்த்தக வட்டமேஜை ஆகியவற்றைக் கொண்ட இதன் பணிக்குழு 20 ஆயிரம் ஒக்சிஜன் செறிவூட்டிகளை இந்தியாவுக்கு வழங்க உறுதி பூண்டுள்ளது. இந்த வார இறுதியில் 1,000 ஒக்சிஜன் செறிவூட்டிகள் வந்து சேரும் என டெலாய்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி புனித் ரெஞ்சன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# சோமாலியா நெருக்கடிக்கு பேச்சு மூலம் தீர்வுகாண ஐ.நா.செயலாளர் அழைப்பு

சோமாலியாவில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு பேச்சு மூலம் தீர்வுகாண ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் அதிபராக இருந்து வருபவர் முஹம்மது அப்துல்லாஹி பர்மாஜோ.

இவரது 4 ஆண்டுகால பதவிக் காலம் கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், அதற்கு முன்பாக அதிபர் தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் தேர்தலை எப்படி நடத்துவது என்பதில் ஆளும் கட்சிக்கும் மற்ற எதிர்க்கட்சிகளுக்கும் இடையே இருந்த முரண்பாடு தேர்தலுக்கு முட்டுக் கட்டை போட வைத்தது.

இது தொடர்பாக பல்வேறு கட்ட பேச்சுகள் நடந்தும் அதில் எந்தப் பலனும் கிட்டவில்லை.

இந்தச் சூழலில் அதிபர் முஹம்மது அப்துல்லாஹி பர்மாஜோவின் பதவிக் காலத்தை மேலும் 2 ஆண்டு களுக்கு நீடிக்க வகை செய்யும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றம் கடந்த சில தினங்களுக்கு முன்பு நிறைவேற்றியது.

அதிபர் முஹம்மது அப்துல்லாஹி பர்மாஜோவும் இதற்கு ஒப்புதல் அளித்தார். அதேசமயம் எதிர்க்கட் சிகள் இது அரசியலமைப்புக்கு எதிரானது எனக் குற்றம்சாட்டின. அதேபோல் சர்வதேச நாடுகள் பலவும் இதனை கடுமையாக விமர்சித்தன. இந்த அரசியல் குழப்பத்தால் சோமாலியாவில் அசாதாரண சூழ்நிலை நிலவி வருகிறது.

ஒருபுறம் மக்கள் அதிபரின் பதவி நீடிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்திவருகின்றனர். அதேவேளையில் இராணுவத்தில் ஒரு பிரிவு அதிபருக்கு எதிராக அணிதிரண்டு உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் மொகாதீசுவில் அதிபர் ஆதரவு இராணுவ வீரர்களும் கிளர்ச்சி இராணுவ வீரர்களும் கடுமையாக மோதிக் கொண்டனர். இரு தரப்பையும் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டனர்.

அதிபர் ஆதரவு இராணுவ வீரர்களின் முகாம் மற்றும் சோதனைச் சாவடிகள் மீது கிளர்ச்சி இராணுவ வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனக் கூறப்படுகிறது. அதே போல் அதிபர் ஆதரவு இராணுவ வீரர்கள் முன்னாள் அதிபர் ஹாசன் ஷேக் முஹம்மது உட்பட எதிர்கட்சி தலைவர்கள் வீடுகளில் தாக்குதல் நடத்தியதாக குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

இராணுவத்தின் இருதரப்பு மோதலில் பலர் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது. எனினும் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பது பற்றி உறுதியான தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை.



அரசியல் குழப்பங்களால் அந்த நாட்டு இராணுவத்தில் பிளவு மற்றும் மோதல் ஏற்பட்டுள்ளதால் அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் சோமாலியாவில் நிலவும் நெருக்கடி குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் மிகுந்த கவலை தெரிவித்துள்ளார்.

இது அவரது செய்தி தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் வெளியிட்டுள்ள அறிக்கையில் "சோமாலியாவின் தற்போதைய நிலையால் பொதுச்செயலாளர் மிகுந்த கவலையடைந்துள்ளார். அங்கு நிலவும் அரசியல் நெருக்கடிக்கு காரணமானவர்கள் அனைவரும் வன்முறையில் இருந்து விலகி அவர்களின் வேறுபாடுகளை உரையாடல்கள் மற்றும் சமரசத்தின் மூலம் தீர்க்க வேண்டும் என்று பொதுச்செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார். மேலும் தேர்தல் குறித்து ஒரு முறையான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி சோமாலிய மக்களுக்கு நம்பிக்கையை உண்டாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்" எனக் கூறப்பட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸில் இராணுவ ஹெலிக்கொப்டர் கடலில் விழுந்து நொறுங்கியது; ஒருவர் பலி

பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் செபு மாகாணத்தின் மாக்டன் தீவில் உள்ள விமானப்படை தளத்தில் இருந்து அந்நாட்டு விமானப் படைக்கு சொந்தமான 'எம்520எம்ஜி' தாக்குதல் ரக ஹெலிக்கொப்டர் ஒன்று வழக்கமான பயிற்சிக்காக புறப்பட்டு சென்றது. ஹெலிக்கொப்டரில் விமானி உள்பட 4 பேர் இருந்தனர். இந்த ஹெலிக்கொப்டர்



போஹோல் மாகாணத்தின் கடாபி நகருக்கு அருகே வானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது.

இதனையடுத்து விமானி ஹெலிக்கொப்டரை அவசரமாக தரையிறக்க முயற்சித்தார். ஆனால் அவரது கட்டுக்குள் வராத ஹெலிக்கொப்டர் அங்குள்ள கடலில் விழுந்து நொறுங்கியது.

இந்தக் கோர விபத்தில் விமானத்தில் இருந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மற்ற 3 பேரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது என பிலிப்பைன்ஸ் இராணுவம் தெரிவித்துள்ளது.

## நாலாயிரம் பேருடன் இசை விருது விழா

இங்கிலாந்தின் மிக பிரபலமான இசை விழாவான 'பிரிட் இசை விருது விழா', வருகின்ற மே 11 ஆம் திகதி நடைபெற உள்ளது. இவ்விருது விழா, லண்டனில் உள்ள 'ஓ2' அரேனாவில் நடத்தப்பட உள்ளது. இதில் 4,000 பேர் கலந்து கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும் இதில் கலந்து கொள்பவர்கள் மாஸ்க் அணியத் தேவையில்லை, சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு பின் பெரிய நிகழ்ச்சிகளுக்கு எத்தனை பேரை அனுமதிக்கலாம் என்பதற்கு முன்



னோட்டமாக இந்த விருது விழா நடைபெற உள்ளதாம். மேலும் இதில் கலந்து கொள்ள உள்ள 4,000 பேரில் 2,500 பேர் முன்களப் பணியாளர்கள் மற்றும் 1,500 பேர் கார்ப்பரேட் நிறுவனங்களை சேர்ந்தவர்களாவர்.

நிகழ்ச்சிக்கு முன்னதாக 4,000 பேருக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு, அதில் தொற்று இல்லை என்று வந்தால் மட்டுமே அவர்கள் அனுமதிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிகழ்ச்சி முடிந்த பின்னரும் அவர்கள் அனைவருக்கும் கொரோனாப் பரிசோதனை செய்யப்படுமாம். ஏதேனும் தொற்றுக்கான அறிகுறி உள்ளதா என்பதை கண்காணிப்பதற்காக நிகழ்ச்சிக்குப் பின் சோதனை செய்யப்பட வுள்ளது.

## நைஜீரியாவில் பொலிஸ் நிலையத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல்: 5 பொலிஸார் பலி

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹரம் தீவிரவாதிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸாரை குறிவைத்து தீவிரவாதத் தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர். இந்த நிலையில் நைஜீரியாவின் தெற்குப் பகுதியில் இமோ மாகாணத்தின் தலைநகர் ஓவர்ரியில் உள்ள பொலிஸ் நிலையம் மீது நேற்றுமுன்தினம் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கிய தீவிரவாதிகள் பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.



தீவிரவாதிகளின் இந்த வெறிச் செயலில் பொலிஸார் 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் பல பொலிஸார் பலத்த காயமடைந்தனர்.

மேலும் இந்த தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக அடைத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் பலர் தப்பி ஓடினர். இந்தச் சம்பவத்துக்கு உடனடியாக எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

முன்னதாக கடந்த 5 ஆம் திகதி ஓவர்ரியில் உள்ள சிறைச்சாலை மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதும், இதில் 1,800 இற்கும் அதிகமான கைதிகள் தப்பி ஓடியமையும் குறிப்பிடத்தக்கது.

## பாக். கொரோனா கட்டுப்பாடுகளை கண்காணிக்க இராணுவம் குவிப்பு

பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் 3 ஆவது அலை வேகமாகப் பரவி வருகிறது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாமல் அந்த நாடு பரிதவித்து வருகிறது. இதனிடையே அரசு விதித்துள்ள கொரோனா கட்டுப்பாடுகளை மக்கள் முறையாகப் பின்பற்றவில்லை என்றால் வைரஸ் பாதிப்பு இன்னும் மோசமாகும் என சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெய்ய இராணுவத்தின் உதவியை நாட உள்ளார் என பிரதமர் இம்ரான்கான் அண்மையில் தெரிவித்தார். இந்த நிலையில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகமாக உள்ள 16 நகரங்களில் பொதுமக்கள் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய அங்கு இராணுவ வீரர்கள் குவிக்கப்பட உள்ளார்கள் என அந்த நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து இராணுவச் செய்தி தொடர்பாளர் பாபர் இப்திகர் பத்திரிகையாளர்களிடம் கூறுகையில் "வரும் நாள்களில் இராணுவ வீரர்கள் நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் சென்று கொரோனா வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவது உறுதி செய்வார்கள்" என கூறினார். நேற்றைய நிலவரப்படி பாகிஸ்தானில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 8 லட்சத்து 4 ஆயிரத்து 939 ஆகவும், கொரோனா பலி எண்ணிக்கை 17 ஆயிரத்து 329 ஆகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வானத்தில் பிரம்மாண்டமாக காட்சியளித்த சூப்பர் மூன்..!

பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் அபூர்வ நிகழ்வு

ஆர்ஜெண்டீனா, வெனிசூலா, சிலி உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகளில், வானில் பிங்க் சூப்பர் மூன் பிரம்மாண்டமாகக் காட்சியளித்தது.

பூமியைச் சுற்றி வரும் நிலவு, பூமிக்கு அருகே வரும் போது வழக்கத்தை விட பெரிதாகவும், பிரகாசமாகவும் காட்சியளிப்பதால் சூப்பர் மூன் என்றழைக்கப்படுகிறது.

பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இந்த அபூர்வக் காட்சியை தென் அமெரிக்கர்கள் ஆர்வமுடன் கண்டு களித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பின்றி 3 ஆவது பரவலை கட்டுப்படுத்த முடியாது

## மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கே.கருணாகரன்

மட்டக்களப்பு, ஏப். 28

அரச தரப்பினால் எவ்வளவுதான் கட்டுப்பாடுகளை விதித்தாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி மட்டக்களப்பில் கொரோனா வைரஸின் மூன்றாவது பரவலை கட்டுப்படுத்த முடியாதெனை மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொடர்பான கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் அவர்களினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைய எவ்வாறான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் எடுக்க வேண்டுமெனை தெளிவான விளக்கங்கள் இதன்போது வழங்கப்பட்டதாகவும், அதற்கு அமைவாக இம்முறை பாடசாலை மாணவர்களை மிக கவனமாக கையாள வேண்டிய பொறுப்பு அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் இருக்கின்றதெனவும், பாடசாலைகளில் எவ்வாறு மாணவர்களைக் கட்டுப்படுத்துவது, அதே வேளை அதிகளவில் மக்கள் கூடும் இடங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது, வர்த்தக நிலையங்களில் எவ்வாறாகச் சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்துவது போன்ற பல்வேறுபட்ட விடயங்களுக்கான தெளிவுபடுத்தல்கள் இந்தக் கூட்டத்தின் போது வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை சுகாதார திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணித்தியாலங்களுக்குள் 42 அன்டிஜன் பரிசோதனைகள் செய்யப்பட்டதில் 2 பேர் காத்தான்குடியிலும் 2 பேர் களுவாஞ்சிகுடியிலும் மேலும் 5 பொலிஸாருமாக மொத்தமாக 9 பேர் கொவிட் 19 பொசிட்டீவ் ஆக இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு அலைகளைப் போலல்லாது இம்முறை மட்டக்களப்பில் ஆரம்பத்திலேயே ஒரளவு கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக கருதுவதுடன், இருந்தாலும் இதை விரிவடையாமல் கட்டுப்பாட்டிலே வைத்திருப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு பெரிதும் அவசியமானது, பொதுமக்கள் அநாவசியமான தேவைகளுக்காக வீடுகளைவிட்டு வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டுமெனவும், அவசிய காரணங்களிற்கு மாத்திரம் வீட்டைவிட்டு வெளியேற வேண்டுமென கேட்டுக்கொண்டதுடன், ஏனைய நோக்கங்களுக்காக வீட்டைவிட்டு வெளியேற வேண்டாமென பொது மக்களை மிக வினையமாகக் கேட்டுக்கொள்வதாக தெரிவித்திருந்தார்.



# வாழைச்சேனையில் 1,850 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பிரதேசத்தில் வைத்து 1,850 கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் பயணித்த பல்ஸர் ரக மோட்டார் சைக்கிளும் வாழைச்சேனை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஜய பெரமுன தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பிறைந்துரைச்சேனை தரிக்கா வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய சந்தேக நபர் என்றும் இவர் தொடர்ந்தும் இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனைப் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே இச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவருடன் தொடர்புடைய வேறுநபர்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் சேகரிக்கப்பட்டுள்ள புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் போதை வியாபாரம் மற்றும் பாவனையில் ஈடுபடுவோர் தொடர்பில் மேலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனுக்கு கல்முனை நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரணியில் கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி நீதிமன்ற தடைஉத்தரவை மீறினார் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனுக்கு எதிராக கல்முனை பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதி கல்முனை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது அதற்கான நீதிமன்ற கட்டளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் நேற்று 27ஆம் திகதி அரியநேத்திரன் வீட்டில் சென்று கையளித்தனர்.

நேற்று மாலை 6, மணிக்கு கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் எதிர்வரும் 30/04/2021, கல்முனை நீதிமன்றில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி தொடர்பான நீதிமன்ற கட்டளையை நான் மீறினேன் என கல்முனை பொலிஸாரால் எனக்கு எதி ராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான நீதிமன்ற கட்டளை கையளிக்கப்பட்டது.

இந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.கலையரசன், கோ. கருணாகரம், இரா.சாணாக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஷ்வரன், அம்பாறை மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிபர் அணி தலைவர் நிதர்சன், தமிழ்மாணவமீட்பு அணித்தலைவர் கணேஷ் ஆகிய ஏழுபேருக்கு எதிராக கல்முனை பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

நீதிமன்ற தடை உத்தரவை மீறி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொண்டதாக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்த போதும் எந்த வித தடைஉத்தரவுகளும் எந்த ஒரு பொலிஸாராலும் தமக்கு கிடைக்கவில்லை என பா.அரியநேத்திரன் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்கள் சார்பில் ஆஜராகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றை கட்டுப்படுத்த மக்களுக்கு விழிப்பூட்டும் திட்டம்



நாட்டில் வேகமாகப் பரவிவரும் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் மக்களை விழிப்பூட்டும் பணியை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல்.அமீன் றிசாட் அவர்களின் கண்கானிப்பில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பள்ளிவாசலில் தொழுகைக்குப் பின்னர் மற்றும் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று கொவிட் – 19 தொடர்பான சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

# புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் ரத்து



திருகோணமலை, ஏப். 28

சிங்கள - தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் எதிர்வரும் 2 ஆம் திகதி நடாத்த திட்டமிடப்பட்ட புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் தற்போது நிலவும் கொரோனாப் பரவல் அசாதாரண நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. மக்கள் கொரோனாவை ஒழிக்க பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.கொவிட்டிற்கு மத்தியில் அவதானத்துடன் உரியநடைமுறைகளைப்பின்பற்றி தொழில் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மூலம் எமது செயற்பாடுகளை தங்குதடையின்றி முன்னெடுக்கமுடியும்.அடிக்கடிகைகளை கழுவல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பது என் பன முக்கியமானதாகும் என்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# உன்னிச்சை குளத்துக்கு செல்லத் தடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மிகவும் பிரபலமான குளமான உன்னிச்சைக் குளத்துக்குச் செல்ல மண்முனை மேற்கு பிரதேச சபை மற்றும் மண்முனை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து தற்காலிக தடையினை அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று நோய்ப் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் உன்னிச்சை குளத்தைப் பார்வையிடல் மற்றும் குளத்தில் நீராடல் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விறுவிறுப்பான போட்டியில் ஒரேயொரு ஓட்டத்தினால் வென்றது ரோயல் சலஞ்சர்ஸ்!




ஐ.பி.எல். 2021 தொடரின் 22 ஆவது போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை ஒரு ஓட்டத்தினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி கப்பிட்டல்ஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஏ.பி.டி.வில்லியர்ஸ் 42 பந்துகளில் 75 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

அடுத்து 172 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 170 ஓட்டங்களைப் பெற்று ஒரேயொரு ஓட்டத்தினால் தோல்வியடைந்தது. அணித்தலைவர் ரிஷப் பண்ட், ஹெட்மையர் இருவரும் ஆட்டமிழக்காது தலா 58, 53 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்தப் போட்டியின் நாயகனாக ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் ஏ.பி.டி.வில்லியர்ஸ் தெரிவானார்.



## இந்தியர்களுக்கு ஒக்சிஜன் வாங்க பிரட் லீ 41 லட்சம் ரூபா நிதியுதவி

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பிரட் லீ கொரோனா பிடியில் சிக்கியுள்ள இந்தியர்களுக்கு ஒக்சிஜன் வாங்குவதற்கான நிறுவனத்துக்கு 41 லட்சம் ரூபா அளித்துள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரரும், தற்போதைய ஐ.பி.எல். சீசனில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வருபவருமான பட் கம்மின்ஸ் சில தினங்களுக்கு முன்னர் 50,000 டொலர்கள் உதவித் தொகையாக வழங்கியிருந்தார். அவரைத் தொடர்ந்து பிரட் லீயும் அந்த வரிசையில் இணைந்துள்ளார்.

இந்தியா எனது இரண்டாவது வீடு. நான் கிரிக்கெட் விளையாடி போதும், ஓய்வு பெற்ற பிறகும் கூட இந்திய மக்கள் என் மீது செலுத்துக்கின்ற அன்புக்கும் பாசத்திற்கும் எல்லையே இல்லை. அதனால், இந்திய மக்களுக்கு என்றென்றும் என் நெஞ்சத்தில் இடம் உள்ளது. இந்தியாவை தற்போது சூழ்ந்துள்ள கொரோனா பிடியின் இறுக்கம் என்னை வாட்டமடையச் செய்துள்ளது.

அதனால், இந்திய மருத்துவமனைகள் ஒக்சிஜன் வாங்க இந்த நிதியை அளிக்கிறேன். இந்த இக்கட்டான நேரத்தில் நாம் எல்லோரும் உதவி தேவைப்படுவோருக்கு உதவ வேண்டும். நேரம் காலம் பார்க்காமல் கொரோனாவுடன் போராடும் முன்கள பணியாளர்களுக்கு எனது நன்றி. மக்கள் அனைவரையும் வீட்டிலேயே இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கைகளை அடிக்கடி கழுவ வேண்டும். தேவையிருந்தால் மட்டும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து, முகக்கவசம் அணிந்து வெளியில் வரவும். இந்த முயற்சியை முன்னெடுத்த பட் கம்மின்ஸுக்கு வாழ்த்துக்கள் என பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

## இலங்கை கிரிக்கெட் பிரபலம் நுவன் சொய்சாவிற்கு ஐ.சி.சியினால் ஆறு வருடத் தடை!



இலங்கைகிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் நுவன்சொய்சாவிற்கு 6 வருடங்கள் கிரிக்கெட் விடயங்களில் பங்கேற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசகிரிக்கெட்சபை (ஐ.சி.சி) யினால் விதிக்கப்பட்டுள்ள இந்தத் தடையானது, 2018 ஒக்டோபர் 31ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் திகதியிலிருந்து விசாரணைகள் நடைபெற்றதனால் விசாரணைகள் நிறைவடையும் வரை அவருக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேசகிரிக்கெட்பேரவையின் ஊழல் தடுப்பு விதிமுறைகள் மூன்றினை மீறியதற்காக இந்தத் தண்டனை நுவன் சொய்சாவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்ற ரி10 தொடரில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளில் நுவன் சொய்சாவுக்கு இருக்கக்கூடிய தொடர்புகள்பற்றிய விசாரணைகள் தனியாக நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்ரிட் ஓபின் டென்னிஸ் தொடரிலிருந்து கனேடிய வீராங்கனை பியான்கா விலகினார்!



மட்ரிட் ஓபின் டென்னிஸ் தொடரிலிருந்து கனேடியாவின் இளம் வீராங்கனையான பியான்கா அன்ட்ரிஸ்கு விலகியுள்ளார். கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே இவர் தனது விலகல் பற்றிய தகவலைப் பகிர்ந்திருக்கிறார்.

அவர் வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில், ஸ்பெய்னுக்கான தனது பயணத்துக்கு முன்னர் இரு தடவைகள் பரிசோதித்த போதும் தனக்கு தொற்று இல்லை என்ற முடிவு வந்ததாகவும். ஆனால், தரையிறங்கியபோது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று இருப்பதாக அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

தான் இப்போது ஓய்வெடுப்பதாகவும் சுகாதார நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை தொடர்ந்து பின்பற்றுவதாகவும் மிக விரைவில் டென்னிஸ் களத்திற்கு வருவதை எதிர்பார்ப்பதாகவும் அவர் தனது டுவிட்டரில் பதிவிட்டிருக்கிறார்.

செம்மண் தரையில் நடைபெறும் மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடர் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் மே மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சென்னை சூப்பர் கிங்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் இன்று டெல்லியில் ஒன்றையொன்று எதிர்த்தாடுகின்றன

ஐ.பி.எல். 2021 தொடரின் 23 ஆவது போட்டி இன்று இடம்பெறவுள்ளது. மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன. இந்தப் போட்டி டெல்லியில் நடைபெறவுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் இரு அணிகளும் இதுவரை 13 முறை நேருக்கு நேர் சந்தித்துள்ளன. இவற்றில் சென்னை சூப்பர் கிங்ஸ் 9 வெற்றிகளையும், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 4 வெற்றிகளையும் பெற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

# தொடர் முடிந்து வீரர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவர் ஐ.பி.எல். நிர்வாகம் உறுதி மொழி வழங்கியது!

இந்தியாவில் கொரோனாத் தொற்று பரவல் அதிகரித்துள்ளதால், இந்தியாவுடனான நேரடி விமான சேவைக்கு மே 15 ஆம் திகதிவரை தடை விதித்து ஆஸ்திரேலிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், இந்தியாவில் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்று விளையாடி வரும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் நாடு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் வீரர்கள் நாடு திரும்ப சிறப்பு விமானத்தை அனுமதிக்க வேண்டும் என மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வரும் கிறிஸ்லின் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும், ஆஸ்திரேலிய வீரர்கள் நாடு திரும்ப சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படாது என அந்நாட்டு பிரதமர் ஸ்கொட் மோரிசன் பதிலளித்திருந்தார். அவர்கள் சொந்த ஏற்பாடுகளின் படியே நாடு திரும்ப முடியும் எனவும் ஆஸ்திரேலியா அரசு தெரிவித்துவிட்டது.

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளின் வீரர்களும் ஐ.பி.எல். தொடரில் விளையாடி வருகின்றனர். இதனால், தொடர் முடிந்ததும் வெளிநாட்டு வீரர்கள் தாயகம் திரும்புவதற்கான நடவடிக்கைகளை பி.சி.சி.ஐ. உறுதி செய்யுமா? என்ற கேள்விகள் எழுந்தன. இந்த நிலையில், வீரர்களின் பாதுகாப்பே முக்கியம் என தெரிவித்துள்ள ஐ.பி.எல். நிர்வாகம், தொடர் முடிந்ததும் வீரர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்புவார்கள் என உறுதி அளித்துள்ளது.

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் வெளிநாட்டு வீரர்கள் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளை பி.சி.சி.ஐ கவனித்துக்கொள்ளும் என்றும், வீரர்களின் பாதுகாப்பு கருதி கொரோனா விதிமுறைகளை மேலும் தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளோம் என்றும் ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது. தொடரில் பங்கேற்றுள்ள வீரர்கள் மற்றும் ஏனையவர்களது பாதுகாப்புத்தான் தமது முதன்மையான விடயம் என்றும், இனி வீரர்களுக்கு 5 நாட்களுக்குப் பதிலாக 2 நாட்களுக்கு ஒருமுறை கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் ஐ.பி.எல். நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைக்க பரிந்துரைகள் வெகுவிரைவில் அரசிடம்!

## இ.தொ.கா. தெரிவிப்பு



மலையகத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கான பரிந்துரைகள் வெகுவிரைவில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இ.தொ.காவின் உபதலைவரும், பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் அப்புத்தளை காகொல்ல பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இதனைக் கூறினார்.

தோட்டக் கம்பனிகள் மேலதிக கொடுப்பனவை வழங்க ஒப்புக்கொண்டதன் பின்னர் மேலதிக கொழுந்தை பறிப்பதே உசிதம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இ.தொ.கா. ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு விடயத்தில் இதயசுத்தியுடன் நடந்து கொண்டுள்ளமையை எவரும் மறுக்க கூடாது எனவும் அவர் கூறினார்.

எனினும் காகொல்ல, பொகவத்தலாவ உள்ளிட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு 25 கிலோ தேயிலையை பறிக்க வேண்டும் என தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை நிர்பந்திப்பது வேடிக்கையாகும் எனவும் அவர் கூறினார்.

அந்த பிரச்சினைக்கு அதிகப்பட்சமாக எதிர்வரும் 25 நாள்களுக்குள் தீர்வு கிடைக்கு எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இ.தொ.கா. எப்போதும் தொழிலாளர் நலன்களை மாத்திரம் முன்னிறுத்தி செயற்பட்டுள்ளது என்றும் அதற்கமையவே ஆயிரம் ரூபா சம்பள விடயத்தையும் அணுகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஏனையவர்கள் முன்னர் மலையகப் பெருந்தோட்ட மக்களைக் கம்பனிகளிடம் அடகு வைத்தாகவும் அவர்களை இ.தொ.காவே மீட்டெடுத்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

# மரை இறைச்சி தருவதாக பலரிடம் பணமோசடி செய்த நபர் சிக்கினார்

*வவுனியா, ஏப். 28*

*வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மரை இறைச்சி தருவதாகக் கூறி பணத்தை பெற்றுக் கொண்டு ஏமாற்றி சென்ற நபர் அங்கிருந்த கண்காணிப்பு கமராவில் சிக்கியுள்ளார்.*

*குறித்த நபர் முன்னரும் வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று மரை இறைச்சி தன்னிடம் உள்ளதாகவும் ஒருகிலோ 800 ரூபா என்றும் தெரிவித்து மரை இறைச்சி தருவதாகக் கூறி 15 இற்கும் மேற்பட்ட குடும்பங்களிடம் பணத்தைச் சேகரித்து இறைச்சியை வழங்காமல் ஏமாற்றியுள்ளார். இதனை நம்பிய பலர் குறித்த நபரிடம் ஆயிரக்கணக்கில் பணத்தை வழங்கியுள்ளனர்.*

*எனினும் நீண்ட நாளாகியும் பணத்தை வழங்கியவர்களுக்கு இறைச்சியும் வழங்கப்படவில்லை, பணத்தையும் கொடுக்கவில்லை. குறித்த நபர் தம்மை ஏமாற்றியுள்ளதைப் பின்னரே உணர்ந்தனர். எனவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்குமாறு நலன் விரும்பிகள் தெரிவிக்கின்றனர்.*

# குடும்ப பிரச்சினையைத் தீர்க்கச் சென்ற மாமன் பலி; தந்தை, மகனுக்கு மறியல்

மட்டக்களப்பு நகர் பகுதியில் குடும்ப உறவினரின் குடும்பப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சென்றவரைத் தாக்கியதில் மேற்படி நபர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தந்தையையும் 15 வயதுடைய மகனையும் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுவனை சிறுவர் சீர்திருத்த சிறைச்சாலையில் வைக்குமாறும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ரி.தியாகேஸ்வரன் கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

ஏறாவூர் ஆறுமுகதான்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரான தம்பிப்பிள்ளை மனோகராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் மட்டக்களப்பு இரண்டாம் குறுக்கு வீதியிலுள்ள அவரது சகோதரியின் மகளின் குடும்பமான கணவன் மனைவிக்குள் ஏற்பட்டுள்ள குடும்பப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணியளவில் குறித்த வீட்டிற்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் குடும்ப பிரச்சினை தொடர்பாக கணவன் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தபோது அதனை 15 வயதுடைய அவர்களின் மகன் கையடக்க தொலைபேசியில் மாமனை வீடியோ எடுத்ததையடுத்து மாமன் அந்தச் சிறுவனின் கையடக்கத் தொலைபேசியை பறித்து அவனின் கன்னத்தில் அடித்துள்ளார்.

இதனையடுத்து தனது மகனை அடித்தமையையடுத்து கோபமடைந்து, மாமனை தந்தையும் மகனும் சேர்ந்து அடித்து தாக்கி தள்ளியுள்ளனர்.

தாக்கியவர்களை உறவினர்கள் விலக்கிய பின்னர் அவரைபார்த்தபோது மூச்சின்றி கிடந்தமையையடுத்து அவரை உடன் அருகிலுள்ள மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றநிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்தை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேதபரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனிடையே சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தந்தையையும் 15 வயது மகனையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ரி.தியாகேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுவனை சிறுவர் சீர்திருத்தச் சிறைச்சாலையில் வைக்குமாறும் பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றமை தவறு

## ரணில் விக்கிரமசிங்க காட்டம்



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்துவது முற்றிலும் தவறானது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான உண்மைக் காரணிகளையும், விசாரணை அறிக்கையினையும் நாட்டு மக்களுக்கு அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான புதிய தகவல்களை அரசாங்கம் இதுவரையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை என முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவைக் கைதுசெய்ய முயற்சிப்பதாக குறிப்பிடப்படும் விடயத்தில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான கைது என ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்ற விடயம் தொடர்பாகக் கைது என வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இதனை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிரான செயற்பாடு எனக் கருத வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் விவகாரம் மற்றும் அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்ற சம்பவம் என பிரித்து பார்க்க வேண்டும். இவ்விரு காரணிகளும் எவ்வாறு ஒன்றாக்கப்பட்டன என்பது சந்தேகத்திற்குரியது.

ஒரு விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது அதற்கு இடையில் பிறிதொரு விடயத்துக்குக் கவனம் செலுத்துவது வேறுபட்ட நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் புதிய காரணிகளையும் அரசாங்கம் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக எமது ஆட்சிக் காலத்தில் திணைக்கள மட்டத்திலும் ஆணைக்குழு மட்டத்திலும் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளின் தற்போதைய புதிய காரணிகள் காணப்படுமாயின் அரசாங்கம் அதனை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். ஏப்ரல் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையும், விசாரணைகளின் புதிய பெறுபேறுகளும் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. - என்றார்.

# கோவில் தீ மிதிப்பில் இருவருக்கு எரிகாயம்

## உடையார்கட்டில் சம்பவம்



முல்லைத்தீவு - உடையார்க்கட்டு, குரவில் கிராமத்தில் உள்ள முத்துமாரி அம்மன் கோவிலில் தீ மிதித்த இருவர் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குரவில் பகுதியைச் சேர்ந்த 31, 38 வயதுகளையுடைய ஆண்கள் இருவரே எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். குரவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில், நேற்று முன்தினம் சித்திராப் பௌர்ணமி விழா நடைபெற்றது. அதனை முன்னிட்டு இரவு தீ மிதிப்பு வைபவம் இடம்பெற்றது. இதன் போது, இருவரும் தீ மிதித்து நேர்த்திக் கடனை நிறைவுசெய்து கொண்டிருந்த நிலையில் எரிகாயங்களுக்குள்ளனார்கள்.

இருவரும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org